

30.8.2026 அன்று 104 (ஆ) வட்ட பாகமுகவர் செ. அறிவழகன், அ.இந்திரா ஆகியோரின் இல்ல விழாவில் சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. கலந்து கொண்டு செல்வி.அ.நர்மதாவை வாழ்த்தினார். உடன் கூ.பி.ஜெயின் எம்.சி., வி.மே.ப.செயலாளர், டி.வி. செம்மொழி எம்.சி., பொதுக்குழு உறுப்பினர், ஆர்.வரதன் மாநில மகளிர் தொண்டர் அணி துணை செயலாளர் சுதாதீனதயாளன் எம்.சி., சொ.முருகேசன், 104 வது வட்டச் செயலாளர் பா.தே.தீனதயாளன் மாவட்டப் பிரதிநிதி மற்றும் வட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழகத்தின் வேர்களைத் தேடி என்ற தலைப்பில், கழகத்தின் ஆணிவேராகத் திகழும் கிளைக் கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வின் தொடர்ச்சியாக பொதட்டூர் பேட்டை பேரூராட்சி கிளைக் கழக நிர்வாகிகளை திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன், சந்தித்து உரையாடினார் உடன் பேரூர் செயலாளர் டி.ஆர். கே. பாபு, நிர்வாகிகள் ஓ.எ.நாகலிங்கம், இ.கே. உதயசூரியன், டி. சுகுமார், ஜே. எம். சங்கரன், பி.டி. வாசு, சஞ்சய் காந்தி, சத்யா, கிளைசெயலாளரகள் மகேந்திரன், ராமன், பழனி, ஏ. வெங்கடேசன், முருகன், மோகன், மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## திருத்தணி முருகன் கோவிலுக்கு

# ரூ.48 கோடியில் மாற்று மலைப்பாதை - பணிகளை உடனடியாக தொடங்க வேண்டும்!

### சட்டப்பேரவையில் பி.கே. சேகர்பாபு வலியுறுத்தல்!

சென்னை, செப். 3-

திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு ரூ.48 கோடி மதிப்பீட்டில் அறிவிக்கப்பட்டுள்ள புதிய மாற்று மலைப்பாதைத் திட்டத்திற்கான பணிகளை விரைந்து தொடங்கி, பக்தர்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும் என்று முன்னாள் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சட்டமன்ற உறுப்பினருமான பி.கே. சேகர்பாபு சட்டப்பேரவையில் வலியுறுத்தினார்.



சட்டப்பேரவையில் அவர் பேசியதாவது:

திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு ரூ.48 கோடி செலவில் புதிய மாற்று மலைப்பாதை அமைக்கும் திட்டம் ஏற்கனவே அறிவிக்கப்பட்டு, அதற்கான அரசின் நிதி ஒப்புதலும் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்குத் தேவையான நிலங்களில் 0.83 ஹெக்டேர் வனத்துறைக்குச் சொந்தமான நிலம் தொடர்பான கோப்பு இந்து சமய அறநிலையத்துறையின் நடவடிக்கைக்காக நிலுவையில் உள்ளது. இதற்காக செலுத்த வேண்டிய ரூ.2 கோடியே 7 லட்சம் தொகையை உடனடியாக செலுத்திவிட்டால், ரூ.48 கோடி மதிப்பிலான மாற்று மலைப்பாதை அமைக்கும் பணிக்கான டெண்டர் கோரப்பட்டு, பணிகளை விரைந்து தொடங்குவதற்கு வழிவகுக்கும்.

இந்த மாற்று மலைப் பாதை பயன்பாட்டிற்கு வந்தால், குறிப்பாக ஆந்திரா உள்ளிட்ட வெளிமாநிலங்களிலிருந்து திருத்தணி முருகனை தரிசிக்க வரும் பல்லாயிரக்கணக்கான பக்தர்களுக்கு பெரிதும் பயனுள்ளதாக இருக்கும். மேலும், தற்போதைய மலைப்பாதையில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலையும் பெருமளவில் குறைக்க முடியும்.

எனவே, பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இதைக் கொண்டு வந்து, நிலுவையில் உள்ள ரூ.2 கோடியே 7 லட்சம் தொகையை உடனடியாக செலுத்தி, ரூ.48 கோடி மதிப்பிலான மாற்று மலைப்பாதைத் திட்டத்திற்கான டெண்டரை விரைந்து கோரி, பணிகளை உடனடியாக தொடங்கி பக்தர்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு பி.கே. சேகர்பாபு சட்டப்பேரவையில் வலியுறுத்தினார்.

## நூறு நாள் த.வெ.க. ஆட்சியில் போராடிய

# விவசாயிகளின் மீதான வழக்கையும் தள்ளுபடி செய்வீர்களா?

### சட்டப்பேரவையில் முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கேள்வி!

சென்னை, செப். 3-

சட்டப்பேரவையில் முதலமைச்சர் 110 விதியின் கீழ் அறிக்கை ஒன்றினை படித்தார். அதில் விவசாயிகள் மீதான வழக்குகள் அனைத்தும் திரும்பப் பெறப்படுவதாக அறிவித்தார். அதன் பிறகு நடைபெற்ற விவாதத்தில் முன்னாள் அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் பேசியதாவது:



பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில் விவசாயிகள் போராடியபோது பதியப்பட்ட வழக்குகள் தள்ளுபடி செய்து இருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். இந்த நூறு நாள் ஆட்சியில் விவசாயிகள் பல ஊர்களில் எல்லாம் போராட்டம் செய்து கொண்டிருக்கிறார்கள் அவர்கள் மீது வழக்கு பதிந்து கொண்டிருக்கிறார்கள். அதுவும் தள்ளுபடி செய்யப்படுமா என்று ஒரு கேள்வி எழுகிறது.

எங்கள் ஆட்சியில் செய்தார்கள் என்று சொல்கிறார்கள், உங்கள் ஆட்சியில் நூறு நாளில் விவசாயிகள் கடன் ரத்து செய்ய வேண்டும் என்று கோரிக்கையை முன் வைத்து போராடியவர்களை கைது செய்து மண்டபத்தில் அடைத்து வைத்திருக்கிறார்கள். அந்த வழக்கையும் தள்ளுபடி செய்வீர்களா? என கேட்க விரும்புகிறேன்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் கேள்வி எழுப்பினார்.

## நெல்லை மத்திய மாவட்டம் – நெல்லை

# பேட்டை பகுதியில் கலைஞர் 8 ம் ஆண்டு நினைவு புகழஞ்சலி பொதுக்கூட்டம்!

### மாவட்ட அவைத் தலைவர் முருகன் தலைமை! மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. – சிவாஜி கிருஷ்ணமூர்த்தி பங்கேற்பு!

நெல்லை, செப். 3 -

நவீன தமிழகத்தின் சிற்பி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு புகழஞ்சலி பொதுக் கூட்டம், நெல்லை மத்திய மாவட்டம், நெல்லை பேட்டை முனிசிபல் பஸ் நிலையம் அருகில், நெல்லை மத்திய மாவட்ட அவைத்தலைவர் வி.கே.முருகன் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில், நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப், தலைமைக் கழக பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் பங்கேற்று கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட சாதனைகளையும், பல்வேறு திட்டங்களையும் எடுத்துக் கூறியும், நடைபெற்று வரும் த.வெ.க. ஆட்சியின் நிர்வாக சீர்கேட்டையும், விலைவாசி உயர்வினால் மக்கள்படும் அவதிகளையும் விரிவாக எடுத்துரைத்து சிறப்புரையாற்றினார்கள்.

இந்நிகழ்வில் மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த், மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.வி.சுரேஷ், நெல்லை மாநகராட்சி துணை மேயர் கே.ஆர். ராஜு, நெல்லை கிழக்கு மாநகர பொறுப்பாளர் வழக்கறிஞர் ஏ.எல்.பி. தினேஷ், ஒன்றிய செயலாளர்கள் அருள்மணி, மாரியப்பன், பகுதி பொறுப்பாளர் டாக்டர் சங்கர் உள்பட நெல்லை மத்திய மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடு நெல்லை பேட்டை மேற்கு பகுதி பொறுப்பாளர் கா.சங்கர் செய்திருந்தார்.

